முருகப்பெருமான் துணை

**மகான் யூகிமுனிவர் அருளிய அனுகூல ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

14.01.2023, சனிக்கிழமை

1. அறமாக ஞான சொரூபமாக
அவதாரம் புரிந்த அரங்கனே
வரமாக சன்மார்க்க நெறியை
வழங்கியே வையகம் காத்திடும்
2. காத்திடும் ஞான தேசிகனே
கருணைமிக்க உன் பெருமை கூறி
உத்தமமாய் சுபகிருது சிலைதிங்கள்
உயர்வான முப்பான் திகதி காரிவாரம்
(சுபகிருது வருடம் மார்கழி மாதம் 30 ம் நாள் 14.01.2023, சனிக்கிழமை)
3. வாரமதில் அனுகூல ஆசிதனை
வழங்குவேன் யூகிமுனிவர் யானும்
பாரதம் அரங்கன் தருமம் பெருகி
பசுமையும் வளமையும் பாதுகாப்பும் பெற
4. காப்புத்தரும் மகா சக்தியாக
கந்தப் பெருமானின் இயக்கமாக
ஒப்புக்கொண்டு சேவைக்கென
ஓங்காரக்குடில் படைத்து அருளும்
5. அருளும் அரங்கமகான் வழியில்
அனைவருக்கும் ஞானியாகின்ற
வரமும் வந்தருள இருக்கவே
வணங்கி கலிவாழ் மக்கள்
6. மக்களெல்லாம் அரங்கனிடம் சடுதி
மனமுவந்த சரணாகதி அடைந்து
ஊக்கம் தரும் சன்மார்க்க பலமான
உயிர் கொலை நீக்கி பின்தொடர
7. தொடரவே ஜீவத்தயவு என்கின்ற
தெய்வ பலம் எங்கும் வியாபித்து
இடர்கள் என்பதே இல்லா வண்ணம்
இந்த பாரதம் நிலைகள் சிறந்து
8. சிறந்துமே ஞானவான்கள் கூடிய
சேவையாகவே மாறி இனிதே
அருந்தவசி அனுகூலம் தன்னால்
அனுகிடும் ஞானத் தலைமையாக
9. ஆகவே ஞானிகள் படைபெருக
ஆளுமையும் ஞான ஆட்சியாக
செகமெல்லாம் பரவி நன்கு
செப்பிடுவேன் உலகமாற்றம் நிகழும்

10. நிகழவே ஞான குரு அரங்கனே
நிலவுலகில் அழியாமை வரம்
வகையாக எளியவர்க்கும் தரும்
வள்ளலே வாழும் ஞானியே

11. ஞானியே வானவர் தேவர்களே
நல்கி உன் சேவையில் வியந்து
தானாக சரணடைந்து துணைநிற்க
தவராஜா உன் நோக்கம் வெற்றி காணும்
அனுகூல ஆசி முற்றே

–சுபம்–